**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், தேவகோட்டை**

**O.S.No. 76/2016**

வாதி / பிரதிவாதி தரப்பு சாட்சி : வா.சா.4

பெயர் : பாகம்பிரியாள்

தகப்பனார் பெயர் : சிவாஜி

தொழில் :

கிராமம் :

தாலுகா :

2025ஆம் ஆண்டு ஜூன் மாதம் 18ம் நாள் புதன்கிழமை 1872 ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டத்தின்படி பெஞ்ச் கிளார்க் திரு.மாஆ.மணியரசன் என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறி சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

**<u>1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>**

**1.** நான் கடந்த 21.10.2024 அன்று நீதிமன்றத்தில் சாட்சி அளித்த பிறகு உடல்நிலை குறைவின் காரணமாக தான் சாட்சி அளிக்க மீண்டும் வரவில்லை என்றால் சரிதான். மேற்படி உடல்நிலை சரியில்லாதது குறித்து நான் மருத்துவ சிகிச்சை பெற்றது தொடர்பான ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் சாட்சி கூறுவதற்கு நீதிமன்றத்திலிருந்து சம்மன் எதுவும் வரவில்லை என்றால் சரிதான். எங்கள் வழக்கறிஞர் தான் வாய்தா விவரத்தை சொன்னார் என்றால் சரிதான். நான் முதலில் நீதிமன்றத்தில் சாட்சி கூறிய பிறகு வழக்கு குறித்து நானும் என் தகப்பனாரும் பிரதிவாதிகளுடன் சமாதானம் பேசிக் கொண்டோம் என்றால் சரிதான். மேற்படி சமாதானத்தில் உடன்பாடு ஏற்படாததால் தான் தற்போது நீதிமன்றத்திற்கு சாட்சி சொல்ல வந்துளளேன் என்றால் சமாதானம் ஏற்பட்டது. என்ன சமாதானம் ஏற்பட்டது என்றால் எனது தகப்பனார் மணியடிப்பதற்கு ஏற்றுக்கொண்டு சாமி கும்பிடலாம் என்று சமாதானம் பேசி கையெழுத்து போட்டு கொடுத்தார்கள். இந்த சமாதானத்தின் படி எனது தகப்பனாருக்கு மணியடிப்பதற்கு உரிமை உண்டு என்றால் சரிதான். மேற்படி சமாதானத்தில் ஏற்பட்ட ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எங்களது வாதத்தின் படி இந்த கோவில் மற்றும் அதன் நிர்வாகம்

மற்றும் சமான்கள், கோவில் உடைமைகள் அனைத்து எங்களுக்கு தான் சொந்தம் எங்கள் வசம் தான் உள்ளது என்றால் சரிதான்.

**2.** இந்த கோவில் சம்மதமான உடைமைகள் பரம்பரை பரம்பரையாக எனது தகப்பனார் தான் நிர்வாகித்து வருகிறார் என்றால் (சாட்சிக்கு கேள்வி புரியவில்லை மீண்டும் கேட்குமாறு கூறினார், மீண்டும் வினாவிய பிறகு பதில் அளித்தார்.) முன்பு வைத்திருந்தார் தற்பொழுது உடைமைகளை அவர் அவர்கள் பிரித்து வைத்துள்ளார்கள். மேற்கூறிய உடைமைகளை எனது தகப்பனாரிடமிருந்து எந்த வருடம் யார் பிரித்து எடுத்தார்கள் என்றால் வருடம் நினைவில் இல்லை மாணிக்கம் என்பவர் பிரித்து எடுத்துக்கொண்டார். அது சம்மந்தமாக எனது தகப்பனார் எந்த காவல் நிலையத்திலும் புகார் அளிக்கவில்லை என்றால் சரிதான். அது சம்மந்தமாக கிராம மக்கள் முன்நிலையில் பஞ்சாயத்து எதுவும் வைக்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் 8 முதல் 13 பிரதிவாதிகளாக கிராமத்தார்களை எனது தகப்பனார் ஏன் சேர்த்துள்ளார் என்றால் கோவில் பூசாரித்தனம் சம்மந்தமாக கூட்டம் போட்டு பேசினோம் அதில் உடன்பாடு ஏற்படாததால் வழக்கில் சேர்த்தோம். மேற்கூறிய கூட்டம் எப்போது நடைபெற்றது என்றால் நினைவில் இல்லை. தாவா கோவிலில் வருடந்தோறும் எந்த மாதம் திருவிழா நடைபெறும் என்றால் ஆனி அல்லது ஆடி மாதம் நடைபெறும். மேற்படி மாதங்களில் எந்த செவ்வாய் திருவிழா நடைபெறும் என்றால் 2வது செவ்வாய் அல்லது 3 வது செவ்வாய் காப்பு கட்டி அதற்கு அடுத்த வாரம் திருவிழா நடைபெறும்.

**3.** நிரூபணவாக்குமூலத்தில் 3வது பக்கத்தில் 5வது பத்தியில் ஒவ்வொரு வருடமும் ஆடி மாதம் காப்பு கட்டி திருவிழா நடைபெறும் என்று சொல்லியுள்ளது சரியா என்றால் சரிதான். தாவா சொத்து கோவில் சம்மதமான 6 ஏக்கர் நிலம் எங்களது அனுபவத்தில் தான் உள்ளது என்றால் சரிதான். அதில் இருந்து வரும் வருமானத்தில் எனது தகப்பனார் தான் பெற்று வருகிறார் என்றால் முன்பு வருமானம் வந்தது கடந்த 7 வருடமாக வருமானம் எதுவும் வரவில்லை. தாவா கோவில் சம்மந்தமான நகைகள் எனது தகப்பனாரிடம் தான் உள்ளது என்றால் தற்போது அவரிடம் இல்லை. தாவா கோவிலில் உள்ள சாமி நகைகளின் அளவு குறித்து எனது தகப்பனாருக்கு தெரியுமா என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. உண்மையில் எனது தகப்பனர் தாவா கோவிலில் பரம்பரை

பூசாரியாக இருந்து இருந்தால் அங்கிருக்கும் நகைகள் மற்றும் வெள்ளி சமான்கள் குறித்து தெரிந்து இருக்கும் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது.

**4.** பொதுவாக கிராம கோவில்களில் ஒரு பூசாரிடமிருந்து மற்றொரு பூசாரிக்கு பொறுப்பு ஒப்படைக்கும் போது கிராம மக்கள் முன்னிலையில் கோவில் நகைகள் மற்றும் உடைமைகள் குறித்து எழுத்து பூர்வமாக எழுதி வாங்குவார்கள் என்றால் சரிதான். எனது தகப்பனாரிடமிருந்து மாணிக்கம் என்பவர் கோவில் உடைமைகளை எடுத்து கொண்டது குறித்து எழுத்து பூர்வகமாக ஏதேனும் குறித்து வைக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. தாவா கோவிலில் பூசாரி வசம் தான் கோவில் நகைகள் மற்றும் வெள்ளி சாமான்கள் இருக்கும் என்றால் சரிதான் ஆனால் தற்போது எனது தந்தையிடம் இல்லை. தாவா வழக்கு தாக்கல் செய்த நாள் முதல் நாளது தேதி வரை தாவா கோவிலில் என் தந்தை எந்த பூஜையும் செய்யவில்லை என்றால் சரிதான்.

**5.** கடந்த வருடம் 2024ல் திருவிழாவில் கிராமத்தார்களின் அனுமதியுடன் மாணிக்கம் தான் மணியடித்தார் என்றால் சரிதான். தாவா கோவில் எந்த கிராமங்களுக்கு பாத்தியப்பட்டது என்றால் சூரியன் குடியிருப்பு, அனுமந்தகுடி, மேலக்குடி ஆகிய கிராமங்களுக்கு பாத்தியப்பட்ட கிராம கோவில் ஆகும். மேற்படி 3 கிராமங்களிலும் சுமார் 500க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். தாவா கோவில் சம்மந்தமாக கிராம மக்கள் ஒன்று கூடி வரி வசூல் செய்து திருவிழா நடத்துவது என்றால் சரிதான். எனது தகப்பனார் தான் தாவா கோவிலில் பரம்பரை பூசாரியாக இருந்தார் என்பதற்கு மேற்படி 3 கிராமத்தில் முக்கிய பிரமுகர்களை எங்களது தரப்பு சாட்சியாக விசாரித்தோமா என்றால் விசாரிப்போம். தாவா கோவில் இந்து சமயஅறநிலையத் துறைக்கு கட்டுப்பட்ட கோவிலா என்றால் அது குறித்து எனக்கு தெரியாது.

**6.** நான் எனது தகப்பனாருடன் தான் வசித்து வருகிறேன். தாவா கோவிலில் எனது தகப்பனாரின் அனுபவத்தை பிரதிவாதிகள் எப்போது தடுத்தார்கள் என்றால் சுமார் 7 வருடங்களுக்கு முன்பு தடுத்தார்கள். எனது தகப்பனார் தாவா வழக்கில் என்ன பரிகாரம் கோரியுள்ளார் என்றால் கோவிலில் பூசாரிதனம் செய்ய வேண்டும் என்றும், மணியடிக்க உரிமை வேண்டும் என்று பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார். தாவா கோவில் எங்களுக்கு பூர்விகமாக சொந்தம் என்பதற்கோ எனது தகப்பனார்தான் பரம்பரை பூசாரி என்பதற்கோ ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துயுள்ளேனா என்றால் செய்துள்ளேன். எனது தகப்பனார் அரசு பணியிலிருந்து

ஓய்வு பெற்றவர் என்றால் சரிதான். அந்த அரசு பணியில் எனது தகப்பனாரின் பெயர் கருப்பன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**7.** தாவா வழக்கில் 1 முதல் 4 பிரதிவாதிகளின் வகையறா எங்களுக்கு பங்காளிகள் என்றால் சரிதான். 1 முதல் 4 பிரதிவாதிகளும் பூசாரிகள் தான் என்றால் எனது தகப்பனார் தான் முக்கிய பூசாரி அவர்கள் உதவியாக நிற்பார்கள். எனது தகப்பனார் சுப்பையா, கருப்பன் என்பவருக்கு சுவீகார மகனாக வந்தவர் என்றால் எனக்கு தெரியாது. எனது தகப்பனார் சுப்பையாவின் ஜனன தகப்பனாரின் பெயர் காளிமுத்து என்றால் அவரது தகப்பனாரின் பெயர் கருப்பன் என்று எனக்கு தெரியும். கருப்பன் என்பவரின் உடன் பிறந்த சகோதரர் தான் காளிமுத்து என்றால் சரிதான். கருப்பன் என்பவரின் பூர்விகம் புளிக்குளம் கிராமம் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. எனது தகப்பனார் சுப்பையா, கருப்பன் என்பவரின் வாரிசு என்று கூறி தான் தாவா கோவிலில் பூசாரி தனம் செய்ய உரிமை கொண்டாடி வருகிறார் என்றால் சரிதான். எனது தகப்பனார் நெடுஞ்சாலை துறையில் பணியில் இருக்கும் போது காளிமுத்து மகன் என்று கூறி தான் பணிபுரிந்து தற்போது ஓய்வு ஊதியம் பெற்று வருகிறார் என்றால் இல்லை, கருப்பன் மகன் என்று கூறி தான் பணியில் இருந்து ஓய்வு பெற்றார்.

**8.** கருப்பன் மகன் என்று கூறியதற்கு ஆவணம் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது போல் எனது தகப்பனாரின் ஆதார் அட்டையோ அல்லது வாக்காளர் அடையாள அட்டையோ அல்லது பணி சம்மந்தமான ஆவணங்களையோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது தகப்பனார் கருப்பனின் மகன் இல்லை என்றும் அதனால் பூசாரி உரிமை இல்லை என்றும் சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**